1993 மார்ச் 30]

திரு. எம். பூராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதுமில்லை என்று சொல்லாத இதய தெய்வம் புரட்சித் தலைவியின் அரசு, பூம்புகார் தொகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் நிறைந்த தொகுதி என்பதை அறியும். ஆகவே, தயவு கூர்ந்து அங்கே கால்நடைப் பண்ணை அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 10 இடங்களில் கால்நடைப் பண்ணைகள் இருக்கின்றன. அதிலே 3 தஞ்சை மாவட்டத்திலே ஈச்சங்கோட்டை மற்றும் ஒரத்தநாடு பகுதியிலேயும் நாகை - காயிதே மில்லத் மாவட்டத்தில் கொற்கையிலும் பண்ணைகள் இருக்கின்றன. எனவே புதிதாகப் பண்ணை வைக்க வேண்டிய அவசியம் இல்லையென இத்துறை கருதுகிறது.

திரு. எம். பூராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால் நடைகள் மிகவும் நிறைந்த இடம் பூம்புகார், ஆகவே, தயவு செய்து வருகின்ற ஆண்டிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக கால் நடைப் பண்ணைகள் அமைக்க வேண்டிய சூழ்நிலை வருகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 177, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

177—

பரமக்குடியில் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடு கட்ட நிலம் கையகப்படுத்தல்.

*10848—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடு கட்ட நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித், துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பரமக்குடி வட்டத்தில் கமுதக்குடி மற்றும் காட்டு பரமகுடி கிராமத்தில் 14.56 ஏக்கர் பட்டா நிலங்களை கிரயத்திற்கு வாங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர். எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் உள்ளதாகக் கூறிய தகவலுக்கு பரமக்குடி தொகுதி மக்களின் சார்பில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறிய மற்றும் நடுத்தர நகர வீடு கட்டும் திட்டத்தின் மூலம் மூன்றாண்டுகளுக்கு முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அது உரிய நோக்கில் ஒப்பங்கம் போடப்படாமல் விடப்பட்டது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? நமது அரசு ஹையர் காம்பன் சேஷன் கொடுத்து அந்த இடத்தை மீண்டும் பெற நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னது போல், மூன்றாண்டுகளுக்கு முன்பாக பரமக்குடியிலே வீட்டு வசதி திட்டத்திற்காக நிலம் தேர்வு செய்யப்பட்டது. பொதுவாக சிறிய மற்றும் நடுத்தர நகரங்களிலே தனியாரிடம் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தி, மாவட்ட ஆட்சித் தலைவரைக் கொண்ட கமிட்டி ஒன்று விலையை நிர்ணயம் செய்து, அந்த வீட்டு வசதிக்கான நிலங்களைத் தேர்வு செய்கின்றார்கள், அந்த அடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டம், தெளிகாத்த நல்லூர் கிராமத்தில் பரமக்குடி வட்டத்தில் புல எண். 502,14, சுமார் 32.38 ஏக்கர் பட்டா நிலங்களை வீட்டு வசதி வாரியம் விலைக்கு வாங்கி சிறிய மற்றும் நடுத்தர நகர வீடுகள் கட்டும் திட்டம் செயல்படுத்தப்படுவதாக இருந்தது. முறைப்படி பட்டா நிலங்களை வாங்குவதற்காக அரசு ஆணை எண். 169, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் வாயிலாக ஒப்புதலும் அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், நிலச் சொந்தக் காரர்கள் நிலத்திற்கு மேலும் அதிக விலை கேட்டு நிலங்களை வீட்டு வசதி வாரியத்திற்குக் கிரயம் செய்து கொடுக்க மறுத்து விட்டார்கள். எனவே, அந்த நிலங்களை வாங்கும் திட்டம்

1993 மார்ச் 30]

அரசிடமிருந்து கைவிடப்பட்டது. ஆகையால் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தீர்மானம் புதிதாக ஒன்று போடப்பட்டு கமுதக் குடி மற்றும் காட்டு பரமக்குடி கிராமத்தில்—பரமக்குடி வட்டத் திலேயே—சுமார் 14.56 ஏக்கர் பட்டா நிலங்களை வாங்கி இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குண்டான அனைத்துப் பூர் வாங்கப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, பரமக்குடி தொகுதி பின் தங்கிய பகுதியாக இருக் கிறது. மாவட்டத்திலேயே பரமக்குடி பெரிய நகரமாகவும் உள்ளது. இங்கு பல அரசு அலுவலகங்கள் இருக்கின்றன. இங்கு 150 தனிக் குடியிருப்புகளும், 100 அடுக்கு மாடி வீடுகளும் அரசு அலுவலர்களுக்காகக் கட்டும் திட்டத்தை உடனடியாக இந்த நிதியாண்டில் கட்டி முடிக்க அரசு முன் வருமா என அமைச்சரவர் கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 178, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

178—

கல்வராயன் மலையில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் சேகரிக்கப்படும் தேன் காதித்துறை மூலம் விற்பனை.

*10138—திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு ஆதி திரா விடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கல்வராயன் மலையில் தேனீ வளர்க்கும் திட்டம் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக செயல்படுத்தப்பட்டு அங்கு சேகரிக்கப்படும் தேன் காதித்துறை மூலம் விற்பனை செய்யப் படுகிறதா?

(ஆ) அதனால் அரசுக்கு கிடைத்த வருமானம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தேன் விற்பனையில் அரசுக்குக் கடந்த 5 ஆண்டுகளில் கிடைத்த இலாபம் ரூ. 29,244.00 ஆகும்.